

# ஸீ.ஆர்.நாராயண ராவ் ஆர்கிடெக்ட்ஸ்

சென்னையின் சாம்பியன் - நிறுவனம்

பளீரென்று பச்சை வண்ணம் நம் கண்களைக் கொள்ளை கொள்கிறது. மிகவும் பரபரப்பு நிறைந்த மைலாப்பூர் தெருவில் ஓரளவு சாதாரணமாகவே இருக்கும் அந்த அலுவலகத்திற்கு வண்ணம் சேர்ப்பது மேஜைப்பலகை மீதிருந்து வெளிப்பட்ட இந்த பச்சை நிறம் தான். வெள்ளை நிற உடையில் இருந்த டாக்டர்.ஸ்ரீநிவாசன், அந்த நிறத்தைப் போலவே புன்னகை தவழ, தனது 'ஸீ.ஆர்.நாராயண ராவ் ஆர்கிடெக்ட்ஸ்' நிறுவனத்தைப் பற்றிப் பேசுகிறார்.

"1963 ஆம் வருடம், சென்னை ஐ.ஐ.டி.யில் முனைவர் பட்டப்படிப்பைத் தொடர்ந்த படிப்பில் (Post-doctoral) இருந்தபொழுதுதான் நான் தொழிலில் சேர்ந்தேன். வாழ்க்கைப் பணி முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் (career choices) அவ்வளவாக இல்லாத அந்தக் காலத்தில், எனது தந்தையின் வியாபாரத்தில் நான் இணைந்தது தவிர்க்க முடியாத ஒன்று. குறுகிய காலம் அமெரிக்காவில் இருந்த பிறகு, எனது சகோதரருடன் குடும்பத் தொழிலில் குதித்தேன். அன்று முதல் இன்று வரை இதில் இருக்கிறேன்", என்று கூறும் டாக்டர். ஸ்ரீ நிவாசன், "ஸீஆர்என் என சென்னையில் எல்லோராலும் அறியப்படும் இந் நிறுவனம், குடும்பத்தின் மூன்று தலைமுறைகளின் ஈடுபாட்டுடன் 75 ஆவது ஆண்டில் காலடி வைக்கிறது", என்றும் பெருமையுடன் கூறுகிறார்.

'ஸீஆர்என்' உருவாகியதின் கதையை - தனது தந்தை தன்னிடம் பகிர்ந்ததை - நம்மிடம் கூறுகிறார் டாக்டர்.ஸ்ரீ நிவாசன். பாரதத்திற்கு சுதந்திரம் வந்த சமயத்தில் மதுரையில் 'அப்பர் சபார்டினேட்' (Upper subordinate) ஆகப் பணி புரிந்து வந்தார் திரு.நாராயண ராவ். ஒரு நாள் குதிரையில் வந்த ஆங்கிலேய கண்காளிப்பாளர் (Superintendent), அங்கு காணப்பட்ட சுவரின் உயரத்தைக் கேட்டார். அங்கு இருந்த பொறியாளர், அதனை அளக்க முயல, சுவரின் மீது ஏறிக் குதித்த நாராயண ராவ், அதன் உயரத்தை உடனே கூறினார். இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட கண்காளிப்பாளர், அவருக்குப் பதவி உயர்வு அளித்து கொச்சின் போர்ட் ட்ர்ஸ்டிற்கு இட மாற்றம் செய்தார். அங்கு ஒரு நாள் மட்டும் வேலை பார்த்த திரு.நாராயண ராவ், 'சாதிக்க வேண்டும்' என்ற நெருப்பு தனக்குள்ளே கொழுந்து விட்டு எரிவதை உணர்ந்து, அரசாங்க வேலையை உதறித் தள்ளி-அந்தக் காலத்தில் இது மிகவும் அரிதான ஒன்று என்பதை நினவில் கொள்க-, தனது ஊருக்கு வந்தார். உடனே பிறந்தது 'ஸீ ஆர் நாராயண ராவ் ஆர்கிடெக்ட்ஸ்'.



நன்னெறி மற்றும் பண்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி அழுத்தமாகப் பேசும் டாக்டர்.ஸ்ரீ நிவாசன், இவையே 'ஸீஆர்என்' நிறுவனத்தின் அடிப்படை என்கிறார். "நன்னெறிப் பண்புகள் உணரப்பட வேண்டியவை.இவற்றைக் கற்பிப்பது இயலாத காரியம். இவற்றைத் தமது பேரார்வத்தினால் உணர்பவர்கள் எமது நிறுவனத்துடன் பின்னிப் பிணைகிறார்கள்", என்கிறார் டாக்டர்.ஸ்ரீ நிவாசன்.

தனது உள்ளுயிர்ப்பாக விளங்கும் தனது பாட்டியின் சொற்களை நினைவு கூறுகிறார் டாக்டர்.ஸ்ரீ நிவாசன். ஐஐடி கரக்பூரில் சிறப்பாகப் படிக்க அறிவுரை கூறிய அவர், அதே சமயத்தில் படித்து விட்டு வந்த பிறகு குடும்பத் தொழிலுக்கு உதவியாக செயலாற்றவும் கூறினார். இயற்கையின் மீது தனக்கு இருக்கும் மரியாதையும், காதலும், அவரிடமிருந்து தான் வந்த து எனக் குறிப்பிடும் டாக்டர்.ஸ்ரீ நிவாசன், இதே பண்பு தனது மகன் திரு.ரகுராமிற்கும் இருக்கிறது என்று பெருமையுடன் கூறுகிறார்.

தனக்குத் தொழில் சுதந்திரம் அளித்த தனது தந்தை, தவறுகளிலிருந்துக் கற்பதை வலியுருத்தி அதுவே நம்மை சரியாக்குவதற்கான வழிமுறை என்பதையும் உணர்த்தியதாகக் கூறும் டாக்டர். ஸ்ரீ நிவாசன், தனது தந்தையின் பெருமை, விடாமுயற்சி, புதுப்புனைவுத்திறன் போன்ற பண்புகளே, குடும்பத் தொழில் செழிக்கக் காரணம் என்று தெளிவுடன் குறிப்பிடுகிறார்.

'கடினமாக உழைத்துப் பெற்ற பணம் என்றுமே தங்கும், எனவே கடன் என்னும் சொல் வேண்டாம்' என்று உரைத்த தனது தாயாரின் சொற்களே தனது பொருள் பற்றிய செயலறிவு மற்றும் ஒழுக்கம் எனக் கூறும் டாக்டர். ஸ்ரீநிவாசன், தனது சகோதரரான திரு.ராகவேந்திரனின் துணையுடன் 'ஸீஆர்என்' ஐ அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்.

1995ஆம் ஆண்டு குடும்பத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் நிறுவனங்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 'ஸீஆர்என்'னிற்கு வந்த பணிகள், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் தனது தொழிலை விரிவடையச் செய்ய வழி வகுத்தன; துபாய் நகரம் மற்றும் இலங்கை, இந்தோனேசியா முதலிய நாடுகளில் கிளைகள் திறக்கப்பட்டன. கார் நிறுவனங்கள் (auto companies) தொழில் பற்றிய நுழைபுலம் அளித்து, சிறகுகளை விரிக்கச் செய்தன. ஒரே சமயத்தில் பேரளவுப் பணிகளைச் செய்ததினால், மூன்று விதமான வித்தியாசமான கலாசாரங்களைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிந்தது- கொரியா தேசத்தவர்கள் பொறுமைசாலிகள், அமெரிக்கர்கள் பணியைப் பொருத்தவரை அவசரக்காரர்கள், ஜெர்மானியர்கள், தரத்தில் விடாப்பிடியாளர்கள். இந்தத் திட்டப்பணிகள், வெளி நாட்டு கட்டிடவியல் நிபுணர்களுடனான அறிமுகத்தை ஏற்படுத்த, அதனால் தொழில் நுட்பத் திறனைப் பற்றிய எங்களது தன்னம்பிக்கை வளர்ந்தது. வளர்ச்சிப்பசி, பந்தயத்தில் நிலைக்க வேண்டும் என்னும் தாகம், இவையே எங்களது தூண்டுகோலாக அமைந்து, சரியான நேரத்தில், சரியான இட த்தில் எங்களை இருக்க வைத்தது", என்று விவரிக்கிறார் டாக்டர். ஸ்ரீ நிவாசன்.

இது போன்ற தொழில்களில் நீண்ட காலம் நிலைக்க நம்மை வேறுபடுத்திக் கொள்வது அவசியமாகிறது." 'ஸீஆர்என்', தொழில் நுட்பத்தில் தம்மை எப்பொழுதும் புதுப்பித்துக் கொண்டு வந்திருக்கிறது. மாற்றத்தின் முக்கியத்துவத் தை அறிவோம் நாங்கள். எனவே, புது ரத்தத்தினை எப்பொழுதும் பாய்ச்சுகிறோம். ஆக்கபூர்வ செயற்பாங்கு எப்பொழுதுமே இருக்கும் இந்த இடத்தில், குறுகிய கண்ணோட்டத்திற்கு இடம் இல்லை. தனது கருத்துரைகளைக் கூற அனைவருக்கும்





சுதந்திரம் உண்டு. அனைவரது கருத்துகளையும் நான் செவி மடுத்துக் கேட்பேன்”, என்று பெருமிதத்துடன் கூறுகிறார் டாக்டர்.ஸ்ரீநிவாசன். லுலு மால், லக்னோவில் உள்ள ‘ஹோட்டல் அன்ட் கன்வென்ஷன் சென்டர், சென்னை ஐடிஸி கிராண்ட் சோழா, ஹெச் ஏ எல், பெங்களூரு, லான்ச் வியூ காலரி, ஸ்ரீஹரிகோட்டா, போன்றவை இவர்களது ஆக்கங்களின் சில சான்றுகள். “நாங்கள் காப்பாளர்கள்- உரிமையாளர்கள் அல்ல”என்று புன்சிரிப்புடன் கூறுகிறார் டாக்டர்.ஸ்ரீ நிவாசன், தனது நிறுவனத்தில் பணிபுரிபவர்களின் அன்பையும், நம்பிக்கையையும், மெய்ம்மையையும் பற்றிக் கூறுங்கால்.

வாஸ்து மற்றும் ஃபெங்க் ஷுய் போன்றவற்றில் நம்பிக்கை தமக்கு இல்லை என்பதை வெளிப்படையாக க் கூறும் இவர், “வாஸ்து கலாசாரம் என்பது ஆக்கபூர்வமான போக்கிற்குத் தடை. ‘நீங்கள் வாஸ்துவினால்தான் முன்னேறியிருக்கிறீர்கள் என்று நம்பினால், அது ஒரு போலித்தனமான அடக்கம்; அதே சமயத்தில் வாஸ்துவினால்தான் உங்களால் எதிலும் ஜெயிக்க முடியவில்லை என்று நம்பினால், நிஜத்திலிருந்து நீங்கள் நழுவ முற்படுகிறீர்கள் என்பதே உண்மை. இரண்டுமே நல்லதல்ல’ என்று ஒரு வாடிக்கையாளரிடம்தாம் கூறியதை விவரிக்கிறார்.

நிர்வாகத்துறையின் சில தாரக மந்திரங்களைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கும் ‘ஸீஆர்என்’, அவற்றுள் முதன்மையாக க் கருதுவது ‘செயலாக்கம் மிகுந்த இணைப்புவழித் திறன்’ (Effective Communication Skills). “மாறுபட்ட கருத்துகளை வேறுபடாமல் தெரிவிப்பது வரவேற்கப்படுகிறது - செயல்திட்ட த்தின் குறிக்கோள் எல்லோருக்கும் புரிந்து அதனைத் திறம்பட நிறைவு செய்தால்”, என்று குறிப்பிடுகிறார் டாக்டர்.ஸ்ரீ நிவாசன்.

திட்டங்களும், கனவுகளும் எதிர்பார்த்ததைப் போன்று நிறைவேற்றப்பட்டனவா, என்ற கேள்விக்கு, “நான் மாமனிதர்களின் தோள்களில் அமர்ந்திருக்கிறேன். அறிவு என்னும் கடலில் குழந்தைகளைப் போல கூழாங்கற்களை எடுத்துக் கொண்டிருக்கிறேன். எனது சாதனைகளுக்கு, ஒரு தேர்வில் மாணவன் வெற்றியடைந்தால் கிடைக்கும் குறைந்த மதிப்பெண்களே வழங்குவேன் நான். நிறைய முயற்சிகள் செய்திருப்பதும் மறுக்க முடியாத உண்மை.எனது வாழ்க்கை பற்றி எனக்கு எந்த புகாரோ, வருத்தமோ இல்லை. ஒருவேளை இன்னும் பொறுமையைக் கடைப்பிடித்திருக்கலாம், கோபத்தைக் குறைத்திருக்கலாம்”, என்று மென்னகையுடன் பதிலளிக்கிறார்.

சாதனையாளரான இவரது பேரார்வம், மிக எளிதாகப் புலப்படுகிறது; புன்சிரிப்பும் மிக அசாதாரணமாக வருகிறது; வாழ்வின் மீது இருக்கும் உணர்ச்சியார்வம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்த 80 வயது இளைஞர் பயணம் செய்ய வேண்டிய பாதை இன்னும் அகன்று, நீண்டு இருக்கிறது.

ஷோபனா ரவி